# Tamil Murli Quiz 13-11-2015

தமிழ் முரளி வினாடி-வினா
முரளியினை மறுமுறை நினைவுற உதவும் வினாடி-வினா. இன்றைய முரளியிலிருந்தே கேள்விகள் கேட்கப்படும்.
இங்கே கிளிக் செய்க: 20 நிமிட முரளியின் எம்பி3 கோப்புகள் மற்றும் பழைய வினாடி-வினா.abc

**Q.1)** <u>சரியான விடை கொண்டு வாக்கியத்தை முடிக்கவும்:</u>
**நாடகம் முடிவடைய இன்னும் எவ்வளவு நாட்கள் இருக்கின்றன என்று பாபா கூறுகிறார்?**

- **A.** இன்னும் சிறிது வருடங்கள் தான் உள்ளது
- **B.** நாடகம் முடிவுக்கு வந்தே விட்டது
- **C.** சிறிது நாட்கள் தான் உள்ளது
- **D.** இன்னும் 40000 வருடங்கள் உள்ளது

**Q.2)** <u>சரியான 2 (இரண்டு) விடைகளைத் தேர்வு செய்யவும்:</u>
**மனநிலை ஆடாது அசையாது இருக்க வேண்டுமென்றால் எந்த ஒரு விஷயத்தை நினைவில் வைத்திருக்க வேண்டும்?**

- **A.** கடந்து போனவற்றை சிந்திக்காமல் முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும்
- **B.** சதா ஒருவரை மட்டும் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்
- **C.** எதிர்காலத்தில் சத்யுகத்தில் ராஜா ஆகப்போகிறேன் என்ற நினைவில் இருக்க வேண்டும்
- **D.** முழு உலகத்திலும் தந்தை என்னைத்தான் உதவியாளனாக தேர்ந்தெடுத்திருக்கிறார் என்ற போதையில் இருக்க வேண்டும்

**Q.3)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**இப்போது புது உலகிற்கு செல்ல வேண்டும் என்றால் நாம் என்ன செய்ய வேண்டும் என்று பாபா கூறுகிறார்?**

- **A.** தூய்மையாக ஆகவேண்டும்
- **B.** பழைய உலகின் மீதிருக்கும் பற்றுதலை நீக்க வேண்டும்
- **C.** நம்மிடம் உள்ள அனைத்தையும் பாபாவிற்கு அர்ப்பணம் செய்து விட வேண்டும்
- **D.** சாட்சியாகவும், டிரஸ்டியாகவும் இருந்து அனைத்து காட்சிகளையும் பார்க்க வேண்டும்.

**Q.4)** <u>சரியா? தவறா?:</u>
**யார் இந்த குலத்தை சேர்ந்தவர்களோ அவர்கள் வெளிப்படுவார்கள். நாற்று நட வேண்டும். ஆதி சனாதன தேவி தேவதா தர்மத்தை சார்ந்தவர்கள் முன் பின் அவசியம் வருவார்கள். கடைசியில் வருபவர்கள் முன்னாள் வந்தவர்களை விட வேகமாகச் செல்வார்கள்.**

- **A.** சரி
- **B.** தவறு

**Q.5)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**சிலர் தனது நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள். 5 - 10 நிமிடம் கூட நினைவில் இருப்பதில்லை. ஆனால் பாபா என்ன கூறுகிறார்?**

- **A.** கர்மம் செய்யும் போதும் நினைவில் இருக்க வேண்டும் என்று
- **B.** சமைக்கும் போது, சாப்பிடும் போது, நடக்கும் போது நினைவில் இருக்க வேண்டும் என்று
- **C.** முரளி கேட்கும் போது ஆத்ம அபிமான ஸ்திதியில் அமர வேண்டும் என்று
- **D.** முழு நாளும் சுய தரிசன சக்கரதாரிகளாக ஆக வேண்டும் என்று .

**Q.6)** <u>சரியா? தவறா? :</u>
**நாம் முன்னேறி சென்று கொண்டே இருக்க வேண்டும், இதற்கு உள்நோக்கு முகத்துடன் அதிகம் இருக்க வேண்டும். அதற்காகத்தான் ஆமையின் உதாரணம் இருக்கிறது.**

- **A.** சரி
- **B.** தவறு

*Q.7)* **<u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>**
**வள்ளலுக்கான ஸ்திதி மற்றும் தனக்குள் கரைத்துக்கொள்ளும் சக்தியின் மூலம் சதா _________________________ மற்றும் சமாதான சொரூபம் ஆகுக.**

- **A.** சக்தி நிறைந்தவர்
- **B.** கல்யாணகாரி
- **C.** விக்ன விநாசக்
- **D.** டிரஸ்டி

*Q.8)* **<u>சரியான விடை கொண்டு வாக்கியத்தை பூர்த்தி செய்யவும்:</u>**
**___________________ தனது துணைவனாக ஆக்கிக்கொண்டால் உங்களது படகு ஒரு பொழுதும் மூழ்க முடியாது.**

- **A.** தூய்மையை
- **B.** தந்தையை
- **C.** சத்தியத்தை
- **D.** நிச்சய புத்தியை

*Q.9)* **சரியா தவறா என்று குறிக்கவும் :**
**"பாம்பும் இறக்க வேண்டும், கம்பும் உடையக்கூடாது" என்பது போல தந்தையைத் தவிர வேறு யாரும் இராஜயோகத்தை கற்பிக்க முடியாது என்பதை யுக்தியாக தெரிவிக்க வேண்டும். அப்போது தான் சந்யாசிகள் தங்களை நிந்திப்பதாக நினைக்க மாட்டார்கள்.**

- **A.** சரி
- **B.** தவறு

*Q.10)* **சரியா தவறா என்று குறிக்கவும் :**
**பாபா நமக்கு வெகு தொலைவில் இருக்கிறார் என்று சிலர் நினைக்கின்றனர். இப்படி நினைப்பது சரியா?**

- **A.** சரி
- **B.** தவறு